**இலங்கை பட்மிட்டன் சங்கம் - 2017**

---

இலங்கை பட்மின்டன் சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டு (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சங்கத்தின் செயற்படுகள் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கிறாரேயன்றி சங்கத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவதத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை பட்மின்டன் சங்கத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியமத்தின் 17 ஆம் பகுதியின் 19 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களுக்காக செயற்திறனான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 233,490 கிரயத்திலான கணனி உபபாகங்கள் முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதற்கான மதிப்பீட்டு வழுவை நியமத்தின் 10 ஆம் பகுதியின் 18 ஆம் பந்தியின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்களின் 2 ஆம் அத்தியாயத்தின் 52 ஆம் பந்தியின் பிரகாரம் அனுமதிக்கப்பட்டவை தவிர நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கும்பொழுது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஒன்றுக்கொன்று தீர்ப்பனவுசெய்யப்படக்கூடாத போதிலும், ரூபா 10,687 கூட்டுத்தொகையான இரண்டு செலுத்தவேண்டிய கடன் மீதிகள் மற்றும் ரூபா 3,000 தொகையான தொங்கல் கணக்கின் கடன் மீதியொன்றும் நிதிநிலமைக்கூற்றில் நடைமுறைச்சொத்துக்களின் கீழ் பெறவேண்டிய மீதியாக குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,445,758 மற்றும் ரூபா 1,432,071 தொகையான 10 பெறவேண்டிய மீதிகளுக்கு எதிராக மீளாய்வாண்டின்போது எதிரீடுசெய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்வதற்காக விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டின்போது பட்மின்டன் சங்கத்திற்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 13,109,475 கிரயமான விமானப் பயணச்சீட்டுக்கள் மற்றும் ரூபா 8,642,864 நன்கொடைப் பணம் ஆகிய அந்தப் பெறுகைகள் வருமானம் மற்றும் செலவினத்தின் கீழ்க் கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பட்மின்டன் சங்கத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் தயாரிப்புக்காக விளையாட்டுக்கள் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்படவேண்டிய ரூபா 500,000 தொகை ஆண்டின் வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானமாக கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 58,372 தொகையினால் கணனி உதிரிப்பாகங்களின் பெறுமானத்தேய்வு மிகைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தமை காரணமாக ஆண்டின் மிகை மற்றும் நிலையான சொத்துக்கள் என்பன சமமான தொகையினால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டியவைகளின் கீழ் நிதிநிலமைக்கூற்றில் 5 வருடங்கள் நிலுவையாகத் தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 24,920 கூட்டுத்தொகையான 02 பெறவேண்டிய மீதிகள் மற்றும் 02 வருடங்களுக்கும் அதிகமாக தொடர்ந்தும் காணப்பட்ட ரூபா 109,446 கூட்டுத்தொகையுடைய மற்றுமொரு 02 மீதிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களுக்கும் அதிகமாகக் காணப்பட்ட அட்டுறு செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுக்காணப்பட்ட ரூபா 2,290,429 கூட்டுத்தொகையான 15 கணக்கு மீதிகள் மற்றும் 3 தொடக்கம் 5 வருடங்கள் வரை ஏனைய பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்ட ரூபா 3,746,110 கூட்டுத்தொகையான 04 கணக்கு மீதிகளினை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அட்டுறு செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட இனங்காணப்படாத பழைய ரூபா 29,300 தொகையான செலுத்தவேண்டிய ஊழியர் சேமலாப நிதி மீதி மற்றும் ரூபா 10,680 தொகையான செலுத்தவேண்டிய ஊழியர் நம்பிக்கை நிதி மீதி கணக்குகளில் சரிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கிடையிலான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| | (அ) நிதிப்பிரமாணம் 396(ஈ) | வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆனால் விநியோகித்த திகதியிலிருந்து 6 மாதங்களைவிடவும் அதிகமாக தேறாததாகக் காணப்படும் ரூபா 57,517 பெறுமதியுடைய 03 காசோலைகள் மீது சங்கம் உரியநேரத்தில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (ஆ) நிதிப்பிரமாணம் 757 | ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சொத்துக்கள் பௌதீகரீதியில் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | ரூபா 2,695,363 தொகையான நிலையான சொத்துக்களுக்கு நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சங்கத்தின் நிதிசார் விளைவுகளினை தொடர்புடைய முன்னைய ஆண்டிற்கான ரூபா 383,171 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 6,184,395 மிகையொன்றை விளைவித்திருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நிதிசார் விளைவுகளில் ரூபா 5,801,224 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 5,430,677 தொகையொன்றால் வருமானம் அதிகரித்திருந்தமை மேற்படி முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 133 ஆம் உறுப்புரையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு அலகு அமுல்படுத்தப்படவேண்டியபோதிலும், சங்கத்தினால் உள்ளகக் கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டும் ஆரம்பமாவதற்கு முன்னர் பாதீடொன்று தயாரிக்கப்படவேண்டியபோதிலும், மீளாய்வாண்டிற்காக சங்கத்தினால் பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (இ) செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 இன் 01/2014 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம், காலப்பகுதிக்குள் அடைந்துகொள்ளப்படவேண்டிய நோக்கங்கள் மற்றும் இலக்குகளினை உள்ளடக்கிய செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சங்கத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | கணக்கீட்டுக் கொள்கைகளினை இனங்காண்பதன் மூலம் கணக்குகள் தயாரிக்கப்பட்டிருக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைந்துகொள்வற்கு பயன்படுத்தக்கூடியவாறு பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைக் கொண்டிருக்காமை. |